Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
S.T.C.No.1443/2021

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டியராஜ் | Father | : வேலுக்சாமி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 18.06.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 18 day of 06.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் உணவு பாதுகாப்பு அலுவலராக பணியாற்றி 2025ம் ஆண்டு பணி ஒய்வு பெற்று, தற்போது தேனியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2021, மார்ச் மாதத்திலிருந்து 2023 ஆகஸ்ட் மாதம் வரை மேலூர் வட்டத்தில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணியாற்றி வந்தேன். 25.09.2020ம் தேதி எனக்கு முன்னர் பணியில் இருந்த உணவு பாதுகாப்பு அலுவலர் சண்முகம் என்பவர் பிஆர், கண்ணன் என்பவரின் கடையில் உணவு மாதிரிகள் எடுத்து பகுப்பாய்விற்கு அனுப்பி அதற்கான முடிவுகள் சென்னை பகுப்பாய்வகத்திலிருந்து 18.11.2020ம் தேதி முடிவுகள் எங்கள் அலுவலகத்திற்கு பெறப்பட்டது. அந்த உணவு மாதிரிகளானது நுகர்வதற்கு பாதுகாப்பு அற்றது என்று முடிவு பெறப்பட்டது. அந்த அறிக்கையை பெறப்பட்ட பின்னர் நியமன அலுவலர் 2020ம் வருடம் டிசம்பர் மாதம் மாநில உணவு பாதுகாப்பு ஆணையரிடம் மேற்கண்ட எதிரிகள் மீது பாதுகாப்பு அற்ற உணவு பொருட்களை விற்பனை செய்ததற்காக குற்ற நடவடிக்கை எடுக்கும் பொருட்டு குற்ற நடவடிக்கை எடுப்பதற்காக அனுமதி கோரி கடிதம் அனுப்பபட்டது. அந்த கடிதத்தை பெற்ற மாநில உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்கள் 03.12.2021ம் தேதியிட்ட அனுமதி கடிதத்தை உணவு பாதுகாப்பு தரங்கள் சட்டப்பிரிவு 30(2)(e)

எதிரிகள் மீது வழக்கு தொடர அனுமதி வழங்கினார். **(அந்த அனுமதி கடிதம் அசாஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** உணவு பாதுகாப்பு சட்டப்பிரிவு 42(5)ன்கீழ் மேதகு நீதிமன்றத்தில் பிஆர்.கண்ணன், மன்மோகன் குமார் புனியா அவர்கள் மீது தண்டனை பிரிவு 59(1), 58 ன்கீழ் வழக்கு ஆவணங்களுடன் சமர்ப்பித்தேன்.

**( எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்குவிசாணை இத்துடன் முடித்துவைக்கப்படுகிறது. )**